MCOP.No. 190/2022
Date : 20.08.2025
Witness Name & Rank – சதாசிவம் - PW1

சாட்சி அழைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. இந்த வழக்கில் நான் விபத்து நடந்து நான்கு நாட்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் போலீசார் வந்து பார்த்து சென்று விட்டார்கள் அதன் பிறகு சென்று நான் புகார் கொடுத்தேன். நான் சொன்னது போல் என்ன விதமான சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான்கு நாட்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை அதனால் தான் மேற்படி எனது ஓட்டுநர் உரிமம் எதுவும் இந்த வழக்கில் சான்றாவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் படி எனக்கு சாதாரண சிராய்ப்பு காயம் தான் ஏற்பட்டுள்ளது அவ்வாறு எனக்கு வழங்கப்பட்டுள்ள மருத்துவ சான்றிலும் எனக்கு சாதாரண காயம் ஏற்பட்டதாகவே மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

2. அதேபோல் புலன் விசாரணை அதிகாரி வழங்கிய இறுதி அறிக்கையிலும் எனக்கு சாதாரண காயம் தான் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தான் இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று சாலையின் நடு மத்திய பகுதியில் எந்தவிதமான சமிக்கையும் இல்லாமல் வலது புறம் திரும்ப முற்பட்ட போது தான் நடந்துள்ளது எனவே மேற்குறிய விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதை மற்றும் அதிவேகம் மட்டுமே காரணம் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் தகுதி சான்று இல்லை என்றால் சரியல்ல,

3. எனவே காப்பீட்டு விதிமுறைக்கு முரணாக மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனம் உள்ளதால் மூன்றாவது எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தில் ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் அனைத்தும் முழுமையாக குணமடைந்து விட்டது வழக்கிற்காக மிகைப்படுத்தி மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாத வருமானத்தை காட்ட எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை எனவே வழக்கத்திற்காக எனது மாத வருமானத்தை மிகைப்படுத்தி காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமோ அல்லது பணியிழப்போ எதுவும் இல்லை எனவே அதன் அடிப்படையிலேயே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் காப்பீட்டு விதிமீறல் உள்ளதால் மூன்றாவது எதிர்மனுதாரருக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தெரியவில்லை. எனக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் காயச்சான்றிதழின்படி சாதாராண காயம் எனவே நான் கோரியுள்ள

இழப்பீடு தொகை மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது. அதை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.